# திருச்சிலுவைப்பாதை

## முன்னுரை

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, தவக்காலத்தின் வெள்ளிக்கிழமையில் நாம் இன்று இருக்கிறோம், தவக்காலத்தின் முக்கிய நிகழ்வான சிலுவைப்பாதை வழிபாட்டை துவங்குகின்றோம். இம்மானிடம் மீட்புபெற தன்னையே தந்தை இறைவனுக்கு தகனபலியாக தந்த நம் ஆண்டவர் இயேசுவின் அன்பின் பாதையில் பயணிக்கயிருக்கின்றோம். அன்பே உருவான இறைவன் கன்னிமரியின் திருவயிற்றில் மனிதனாக உருவாகி இம்மண்ணில் பிறந்து அன்புக்கு சான்று பகர்ந்தார், ஏழை எளியவர்களுக்கு தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்து அவர்களின் விடுதலைக்காக உழைத்தார். உன்னை அன்பு செய்வதைப்போல உனக்கு அடுத்திருப்பவரையும் அன்பு செய்வாயாக என்று அறைகூவல் விடுத்தார். அன்பில்தான் புதிய சமத்துவ சமூகம் அமைக்க இயலும் என தன் தெய்வீக புனித வாழ்வால் மெய்பித்தார். இன்றைய உலகம் இறைமகன் இயேசு காட்டிய அன்பு வாழ்வை மறந்து, சுயநலத்தில் விழுந்து சொல்லொண்ணா துன்பத்தில் வாடுகிறது, அதறக்கு நாம் சாட்சிகள். மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், மொழியின் வெறுப்புணர்வால், ஏழை பணக்காரர் ஏற்றத்தாழ்வு, தேசப்பிரிவுகளால் வேறுபாடு, ஆண் பெண் உறவுகளில் உரசல், குடும்பத்தில் விரிசல் என எண்ணற்ற பிரச்சனைகளை நாளும் சந்திக்கின்றோம். இத்தனை முரண்பாடுகளும் அன்பற்ற வாழ்வினால் நிகழ்ந்தது என்பதை ஊரும் உலகமும் அறியும். இவற்றை நாம் களைய வேண்டாமா வாருங்கள் மீட்பராம் இயேசு சென்ற அன்பின் பாதையில் வழி நடப்போம்.

## முதல் நிலை : இறைமகன் இயேசு தீர்ப்பிடபடுகிறார்.

***அன்புக்கு தண்டனை.*** *இவ்வுலகை ஒரே சொல்லால் படைத்த இறைவன் தன்னால் படைக்கப்பட்ட மனிதனின் முன்னால் நீதி தீர்ப்புக்காக குற்றவாளி கூண்டில் நிறுத்தப்படுகிறார். பிலாத்து மனசாட்சியை முழுவதும் மழுங்கடித்த மனிதன், தன் மனைவியின் மூலமாக அதை புதுபிக்க வாய்ப்புக் கிடைத்தும், தன் நிலையற்ற பதவிக்காக அதை தவறவிட்ட ஒருவன். ஆண்டவர் இயேசு சாவுக்குரியவர், எனவே உரோமையர்களின் உச்சபச்ச தண்டனையான அவமான சிலுவை சாவு வழங்கப்பட வேண்டும் என்று யூத சங்கம் முழுமையும் முயற்சித்தது, வறியவரின் குரலான இறைமகனாம் இயேசுவை கொன்று எளியவரின் வாழ்வை இருளுக்குள் தள்ள மொத்த அதிகார வர்க்கமும் எத்தனித்தது. சாவுக்காக திருமகன் இயேசு ஒருபோதும் அச்சமடையவில்லை ஆனால் அன்பு வாழ்வுக்கு கல்லறை கட்ட வேண்டும் என்ற அவர்களின் செயல் அவரை மிகவும் வருத்தியது. பதவிக்காக நீதியை கொன்று ஆண்டவர் இயேசு சிலுவை சாவுக்குரியவர் என்ற தீர்ப்பு எழுதினான் பிலாத்து.*

*அன்பான இறைமக்களே! பிலாத்து மறைந்தாலும், இன்றும் நீதியை கொல்லும் பிலாத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றனர். இவற்றை பார்த்தும் வாய்மூடி மௌனமாய் வெறும் பார்வையாளர்களாக வாழும் நாமும் பிலாத்துக்கள் என்பதை உணர வேண்டும். நீதி ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் தூக்கு மேடை ஏற்றப்படுகிறது, அநியாயமாக சாதாரண மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. நமது அறைகூவல் என்ன? ஏழைகளுக்காக நமது மனம் இறங்குகிறதா ? குடும்பங்களில் எவ்வாறு நீதி வாழ்கிறது ? மீட்பருளும் இயேசுவின் சிலுவை மரணத்துக்காக கலங்கும் நாம், அநியாயமாக தண்டிக்கப்படுவோருக்காக குரல் கொடுத்திருகின்றோமா? இல்லை அவர்களுக்காக ஆதங்கபட்டிருகின்றோமா? சிந்திப்போம்*

**செபம்**

*அன்பே உருவான இறைவா! அன்புக்காக எல்லாம் அன்புக்காக என்று வாழ்ந்து காட்டிய உன்னதக் கடவுளின் திருமகனே! எம்மில் மனிதம் மலர்ந்திட நீர் காட்டிய அன்பு வாழ்வில் நாங்கள் என்றும் நடந்து உலகில் நீதியை நிலை நாட்ட வரம் தாரும் ஆமென்.*

## இரண்டாம் நிலை: இறைமகன் இயேசுவின்மேல் சிலுவையை சுமத்துகிறார்கள்…

***அன்பின் தோளில் பாவ கறைப்பட்ட உலகம்.*** *தன்னையே இறைவனின் மகன் என்று சொல்லிக்கொண்டு இறைவனுக்கு இழுக்கு சேர்த்தவன் என்ற குற்றசாட்டுக்கு ஆளாகி சிலுவை மரண தண்டனை பெற்றார் நம் ஆண்டவர் இயேசு. மாசற்ற இறைமகன் இயேசுவின் தோளில் பாரமான சிலுவை சுமத்தப்பட்டது. ஆம் உலகத்தின் பாவம் அனைத்தும் மனுமகனின் தோளில். குற்றமற்றவரை குற்றவாளியாக்கி கொடூரமான சாவுக்கு கையளித்து கைகொட்டி சிரித்தது அதிகார வர்க்கம், இருப்பினும் உலகின் முடிசூடா மன்னர் இயேசுவின் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி, காரணம் தன் கொடிய சாவால் பாவத்துக்கும் சாவுக்கும் சாவுமணி அடிக்கபோகிறேன் என்பதால். இறைமகன் இயேசு துணிந்து, வலிந்து சிலுவை மரத்தை ஏற்றுக்கொள்கிறார்.*

*அன்பான இறைமக்களே! இறைவன் தான் படைத்த நீச மனிதனின் ஈடேற்றுத்துக்காக தன்னை முழுமையாக தரும் அன்பு அளப்பரிது, இதைதான் புனித அகஸ்தீனார் கூறினார்,* **அடிமையை மீட்க மகனையை அளித்த அளவுகடந்த அன்புபெருக்கே** *என்று இறைவனின் அன்பை போற்றுகிறார். இன்று நமது அன்புப்பணி எவ்வாறு இருக்கிறது, கொடுத்த பணம், பொருள் உதவிக்கு பாதகைகள் வைத்து விளம்பரம் தேடி தம்பட்டம் அடிக்கும் நிலைதானே. ஆண்டவன் குடிகொள்ளும் ஆலயத்தின் சுவற்றிலும் நன்கொடையாளர்கள் என்ற அடிப்படையில் தொகை வாரியான பெயர் பட்டியல். மீட்பர் இயேசு கேட்பது பணம், பொருள் இவற்றைத் தாண்டி உண்மையான உடனிருப்பு, உறவு என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சமூகத்தின் ஏற்றத்திற்கு நமது அர்பணிப்பு தேவை, பிறரின் சோதனையில் நமது உடனிருப்பு தேவை எனபதை உணருவோம், அன்புள்ள மனிதர்களாக வாழ இனியாவது முயற்சிகள் எடுப்போம்.*

**செபம்**

*இரக்கமே மிகுந்த இறைவா! நாங்கள் மீட்பு பெற, உம்மையே எங்களுக்கு முழுமையாக தந்தீரே, அதுபோல நாங்களும் எமது உறவுகளின் வாழ்வுக்கு முழுமையாக எங்களை அர்பணிக்க வரம் தாரும். ஆமென்.*

## மூன்றாம் நிலை: **இறைமகன் இயேசு முதன்முறை கீழே விழுகிறார்...**

**அன்பின் பாதையில் முதல் சறுக்கல்.** தெய்வத் திருமகன் இயேசுவுக்கு இருப்பது தோல்வலியோ அல்லது உடல்வலியோ அல்ல மாறாக மனவலி, மனிதரின் மாறாத பிடிவாத குணம் தரும் மனவலி. ''அன்பு'' **அன்பு** செய்யபடவேண்டும் என்றார் புனித பிரான்சிஸ் அசிசி. அன்புத் திருமகன் இயேசு போதித்தது நற்செய்தி வாழ்வையே. மூன்று ஆண்டுகள் இதற்காகவே கிறிஸ்து தனது வாழ்வை அர்பணித்து மனிதர் உண்மையான மகிழ்ச்சி பெற உதவினார். ஆனால் மனிதரோ கிறிஸ்துவை மறுத்து இழிவான வழியில் கிடைக்கும் சிற்றின்பத்திற்கு அடிமையாகும் நிலைக்கண்டு பல நேரங்களில் போதகர் இயேசு கலங்கினார். கலிலேயா தொடங்கி எருசலேம் வரை உண்மையை உரக்க போதித்தார். ஆனால் மாறாத மனிதரின் நிலைக்கண்டு மீட்பர் இயேசு தடுமாறுகிறார், அதுவே இந்த சறுக்கல். சறுக்கல்தான். ஆனால் இறைமகன் இயேசு விழுந்து கிடக்கவில்லை, மாறாக எழுந்து சிலுவை சுமக்கிறார். மனிதர் குணம் மாறும். அங்கே நல் மனங்கள் வாழும் என்ற நம்பிக்கையோடு பயணமாகிறார்.

அன்பான இறைமக்களே! நமது மனமும் குணமும் எவ்வாறு இருக்கிறது? நம்மீது நம்பிக்கை வைத்து நம்மை படைத்த இறைவன் முன்னேறி செல்கிறார். நாம் பிறரின் சுமைகளை போக்க துணை செய்கின்றோமா? அல்லது பிறர்க்கு சுமையாய் இருக்கின்றோமா? இன்றைய உலகம் காயங்கள் நிறைந்து, ஊனப்பட்டு, கலங்கிப்போய் காணபடுகிறது, அக்காயங்களை, ஊனத்தை கலக்கத்தை சரிசெய்வது யார்? நாம்தான். நமது நம்பிக்கைதான் என்பதை திருமகன் இயேசுவின் பயணம் நமக்கு உணர்த்துகிறது. விழுந்து கிடக்கமால் எத்தனை ஈடர்பாடுகள் வந்தாலும் எழுந்து நடப்போம், காயமற்ற சமூகத்தை அமைக்க உறுதி எடுப்போம்.

**செபம்**

நம்பிக்கையின் ஊற்றே இறைவா! எங்களது வாழ்கை பாதையில் நாங்கள் சோர்வடையாமல் துணிந்து என்றும் சென்றிடவும், தேவையில் வாழும் சுற்றத்தார்க்கு கரம் நீட்டி, உரமூட்டவும் வரம் தாரும். ஆமென்.

## நான்காம் நிலை: இறைமகன் இயேசு தன் தாயை சந்திக்கிறார்...

***அன்பின் சந்திப்பு.*** *ஆண்டவர் இயேசு தனது அன்பு தாய் புனித மரியன்னையை சந்திக்கின்றார், இது இரண்டு உயிருள்ள இதயங்களின் சந்திப்பு. ஈரைந்து மாதங்கள் தன் கருவிலே இறைவனின் வார்த்தையை தாங்கி அதற்கு உருக்கொடுத்து, இவ்வுலகிற்கு பாவம் போக்கும் செம்மறியாக அன்பு இயேசுவாக வழங்கினார். கருவிலும், கரத்திலும் மார்பிலும் போற்றி வளர்த்த மகன் கொடிய வதைக்கு உள்ளாகி, சிலுவை சுமந்து குற்றவாளியாக ஊர் தூற்றும் நிலைக்கண்டு அன்னை மரியா பதறுகிறார். கண்ணீர் கடலாய் நிற்கும் தன் அன்புத்தாயின் கரம் பற்றிய இறைமகன் இயேசு, வார்த்தைகள் இன்றி கண்களால் மட்டுமே பேசுகிறார். இதுதான் இறைவனின் திட்டம் என அறிந்து அனைத்தையும் மனத்தில் பொதிந்து பொங்கி ஈர விழிகளோடு துடிதுடித்து நிற்கிறார் அன்னை மரியா. மகனின் பயணம் ஒரு அன்பு பயணம் என்று உணர்ந்த பேறுபெற்ற அருள்நிறை அன்னை ஆறுதல் அடைகிறார்.*

*அன்பான இறைமக்களே! இன்றும் பல தாய்மார்கள் கண்ணீரோடு நிற்கின்றனர். இவர்களின் கண்ணீருக்கு பல காரணங்கள். தடம் புரண்ட மனித வாழ்வால், மது, மாது, பணம், தீவிரவாதம், திருட்டு என வாழ்வை இழந்து நிற்கும் பிள்ளைகளின், கணவனின் நிலை. இன்று பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு படிப்பு மற்றும் பல ஏற்றங்களை தர முயலுகின்றனர். ஆனால் கடவுள், மனசாட்சி, அன்பு வாழ்வு என்னும் கடவுளின் கனிகளை தர மறந்துபோய்விட்டனர். விளைவு சமூகத்தில் கறைபடிந்த மனிதர்களின் தொல்லைமிக்க அவலங்கள். அனைவரும் ஆண்டவர் இயேசுவின் வழிநடக்க அன்னை மரியாவிடம் கற்றுக்கொள்வோம்.*

**செபம்**

*அன்பே உருவான இறைவா! வாழ்வில் தூய்மையை கடைபிடித்து, தனிமனித ஒழுக்கத்துடன் வாழவும், உம் தாய் மரியன்னையைப்போல நல்ல பிள்ளைகளை நாங்கள் இந்த சமூகத்திற்கு வழங்க எங்களுக்கு அருள்தாரும். ஆமென்.*

## ஐந்தாம் நிலை : இறைமகன் இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறார்...

**அன்புக்கு கிடைத்த நட்பு.** *பாரமான சிலுவை, முற்கள் நிறைந்த சாட்டை அடியின் கொடிய சித்தரவதை ஆகிவற்றின் காரணத்தால் ஆண்டவர் இயேசுவின் திருவுடல் கிழிந்து தொங்குகிறது, எங்கே இவர் கல்வாரி போகும்முன்பே வழியிலே இறந்துவிடுவாரோ , சிலுவை என்ற அவமான மரணத்திலிருந்து தப்பித்து விடுவாரோ, என்ற அச்சம் உரோமை வீரர்களுக்கும், யூத குருக்களுக்கும் மேலோங்கிருந்தது. தங்களது திட்டம் தோற்க கூடாது என்பதற்காக, அங்கு வேடிக்கை பார்க்க வந்த சீரேனே ஊராகிய சிமியோனை சிலுவை சுமக்குமாறு கட்டாயப்படுத்துகின்றனர். 12 திருத்தூதர்களுக்கும், 72 சீடர்களுக்கும் கிடைக்காத அறிய வாய்ப்பு, இந்த ஏழை விவசாயிக்கு கிடைத்தது. இறைமகன் இயேசுவின் பரிதாபமான நிலைகண்டு வருந்தி, அவருக்கு உதவிட தானும் அவருடன் இணைந்து சிலுவையை சுமக்கிறார். வருந்தி சுமை சுமப்போரே என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன் என்று சொன்ன மனுமகன், சிமியோன் தரும் சிறு இளைப்பாறுதலினால் மகிழ்கின்றார். தனது துன்பமான நேரத்தில் எவ்வித கைமாறும் எதிர்பாராமல் வந்த தோழமையை நினைத்து தெய்வத் திருமகனாம் இயேசு உற்சாகமடைந்து மீட்பு பயணத்தில் முன்செல்கிறார்.*

*அன்பான இறைமக்களே! இன்றும் மனிதம் உயிர் வாழ்வதற்கு சிமியோன் போன்ற நல்ல உள்ளங்கள் தேவை என்பதை நாம் மறவவேண்டாம். இன்பத்தில் கூடி கொண்டாடும் பலர், துன்பம் வந்ததும் ஓடி ஒளிந்து விடுவதை பார்க்கின்றோம், அத்தகைய ஈன குணம் மனிதம் அல்ல என்பதை உணர்வோம். உண்மையான உறவுக்கு மதிப்பளித்து, பணத்தால் வரும் கானல் உறவுகளை களைந்து, ஏழை-எளியோருக்கு தன்னலம் பாராமல் உதவுவோம். வெற்று விளம்பரங்களை, ஆடம்பரங்களைத் தவிர்த்து உண்மையில் உறவுக்கு உயிர்கொடுக்க கை கொடுப்போம்.*

**செபம்**

*இரக்கமே நிறைந்த இறைவா! போலியான உறவினை தவிர்த்து, உண்மையை மனதில் ஏற்றி துன்பத்தில் இருக்கும் அனைவருக்கும் என்னால் இயன்ற உதவியை செய்திட வரும் தாரும். ஆமென்.*

**ஆறாம் நிலை: இறைமகன் இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்...**

**அன்புக்கு மீண்டும் ஒரு தோழமை.** *பூகம்பம் இடையே ஒரு இனிய தென்றல் இறைமகன் இயேசுவின் திருமுகத்தை வருடி செல்லும் காட்சி. ஆம் வெரோனிக்கா என்ற அந்த பெண்-தென்றல் ஒரு அன்பு புரட்சி செய்தது. மன்னிப்பின் ஊற்றாகிய ஆண்டவர் இயேசு சிலுவை சுமந்து செல்லும் பாதையில் பலர் வேடிக்கைப் பார்த்தனர். சிலர் வேதனைப்பட்டனர். ஆனால் யாரும் அவருக்கு உதவ வேண்டும் என்ற துணிச்சல் மட்டும் இல்லை. அந்த புரட்சியை வெரோணி க்கா செய்து முடித்தார். இரத்தம், புழுதி படிந்த தியாகதீபம் இறைமகன் இயேசுவின் மலர் முகத்தை வெரோணிக்கா துடைத்தார். மனுமகனுக்கே மாபெரும் ஆறுதல் அளித்தார். அந்த இதயத்தில் ஈரமுள்ள அன்பு மகளுக்கு இதயவேந்தன் ஆண்டவர் அந்த சிறுதுணியில் தனது திருமுகத்தை பதித்து பரிசளித்தார்.*

*அன்பான இறைமக்களே! வெரோணிக்கா போன்ற கனிந்துருகும் தியாக அன்னையர்கள் நமது மத்தியிலும் உண்டு. ஆனால் அவர்கள் ஒருசிலரே என்று எண்ணும்போதுதான் இருதயம் சற்றே கணக்கிறது. பணம், பதவி, வலிமை என்று சமூகத்தில் செல்வாக்கு உடையோர் நம்மில் பலர் இருந்தாலும், சமூக விடியலுக்கு விடிவெள்ளியாய் ஒளிகொடுக்க யாரும் முன்வருவதில்லை என்பதுதான் உண்மை. சுதனாகிய இறைவன் விரும்புவது வெறும் விசுவாசம் மட்டுமில்லை. மாறாக சேவை நிறைந்த விசுவாசம், அப்படிப்பட்ட மாந்தர்க்கு மட்டும்தான் அவர்தரும் நிம்மதி என்ற அன்பு பரிசு கிடைக்கும். செல்வத்தில் புரண்டாலும், மாட மாளிகை கட்டி, மிடுக்காய் திரிந்தாலும், இருப்பதை இல்லாதவரோடு பகிர மனமில்லை என்றால் நிம்மதி ஒரு எட்டக்கனியே. நம்மால் இயன்ற அளவுக்கு உதவியை, ஏழைகளுக்கும், நற்செய்தி பணிவாழ்வுக்கும் அளிப்போம். ஏழைக்கு இரங்குவது இறைவனுக்கே இரங்குவது என்பதை உணர்வோம். வலக்கை செய்வதை இடக்கை அறியமால் இருக்கட்டும். இதை காணும் இறைவன் நமக்கு முழுமையாக இரங்குவார்.*

**செபம்**

*அன்பின் இறைவா! எம்மை சூழ்ந்து வாழும் எளிய மனிதர்களுக்கும், பசியின் கொடுமையால் ஒட்டிப்போன வயிறுடன் வீதி இறங்கி கையேந்தும் கடைநிலை மனிதருக்கும், இச்சமூகத்தின் விடியலுக்கும் எங்களால் இயன்ற உதவியை வழங்க வரம்தாரும் ஆமென்.*

## ஏழாம் நிலை: இறைமகன் இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்...

***அன்பின் பாதையில் இரண்டாம் சறுக்கல்.*** *யானைக்கும் அடிசறுக்கும் என்பார்கள் இங்கு இறைமகனுக்கே அடிச்சறுக்குகிறது, மீண்டும் ஒருமுறை இறைமகன் இயேசு சிலுவையின் பாரத்தால் தன்னால் உண்டாக்கப்பட்ட பூமிபந்தின்மீது சாய்கிறார். அவர் மனம் தடுமாறவில்லை. ஆனால் நமது நயவஞ்சத்தால், நமது பாவத்தின் சுமையால், நாம் இளைக்கும் அநீதியால் புழுதியில் தள்ளப்படுகிறார். மனிதரின் குணம் கண்டு படைத்தவரே கலங்குகிறார். நாம் மாந்தருக்கு வழங்கிய முழு சுதந்தரத்தை தனது சுயநலத்திற்காக பயன்படுத்தும் நிலைகண்டு வருந்துகிறார். மனிதர் இறைவனின் சாயல் என்பதை மறந்து அவர்களை கொத்து கொத்தாக கொல்லும் மனிதம் இழந்தோரை நினைத்து துடிக்கிறார். உலகம் செல்லும் பயங்கரவாத பாதை, மனிதரை மனிதர் பழிவாங்கும் பாதை, கொடூர கொள்ளை நோய்களை மக்கள்மீது ஏவிவிட்டு மனம் மகிழும் மட்டமான வாழ்வு, மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தி அரங்கேற்றும் எண்ணற்ற ஊழல்கள், மனிதரிடையே ஒற்றுமையின்மை, சீரழிவுகளை போக்க மனமில்லாமை பெண்ணடிமை, குடும்பத்தில் அன்பின்மை, இறைவனை மறந்து வாழிம் கொடிய நிலை. இந்த அவலமான மனித சீரழிவுகளை நினைத்து பதறித்தான் ஆண்டவர் இயேசு இங்கு விழுகிறார்.*

*அன்பான இறைமக்களே! விழுந்து கிடப்பது இறைமகன் அல்ல. மனித சமுதாயம் என்பதை மறந்துவிடக்கூடாது. இதை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு நம்மேல் உள்ளது. நல்லதை ஆற்றும் கடமையும், பொறுப்புணர்ச்சியும் நமக்கு உண்டு என்பதை நாம் தட்டிகழிக்க கூடாது. இன்றைய பல சிக்கல்களுக்கு காரணமாக இருப்பது நமது கடினமான வார்த்தைகள்தான். நமது நாவை காப்போம். மனிதரின் நலனை காப்போம். குடும்பத்தில் உள்ள சிக்கல்களை களைவோம், ஒருவர் ஒருவருக்கு மதிப்பளித்து, குடும்ப ஒற்றுமையை போற்றுவோம், ஆண்டவரின் வார்த்தையை அன்னை மரியைப்போல உள்ளத்தில் இறுத்தி இல்லத்தில் வாழ்ந்து சமூகத்திற்கு எடுத்து செல்வோம் அங்கே விழுந்து கிடக்கும் மனிதரை கைதூக்கி நிறுத்தி அதில் மகிழ்வடைவோம்.*

**செபம்**

*ஆறுதலின் ஊற்றே இறைவா! சமூகத்தில் இருக்கும் எண்ணற்ற இழிவுகளை கண்டு, குறைகள் நிறைந்து கரைகள்படிந்த இச்சமுதாயத்தை சுத்தமாக்க, எங்கள் இதயம் திறந்து, மனிதம் புத்துயிர்பெற பணிகள் ஆற்ற நல்மனதை தாரும். ஆமென்.*

## எட்டாம் நிலை: இறைமகன் இயேசு எருசலேம் மகளிருக்கு ஆறுதல் சொல்கிறார்...

**அன்புக்கு ஆதரவு.** இறைமகன் இயேசுவின் நிலைக்கண்டு, எருசலேம் நகர பெண்கள் மாரடித்து புலம்புகின்றனர். பார்வையற்றவருக்கு பார்வை தந்தவர், மூலையில் முடங்கி முடக்க வாதமுற்றவரை வீதிவரையில் நடக்க வைத்தவர். எண்ணற்ற ஏழைகளுக்கு நற்தொண்டு புரிந்தவர் அனைத்திற்கும் மேலாக இறந்தவரையும் உயிர்ப்பித்தவர் அவருக்கா இந்த அவமான சிலுவை தண்டனை. இது கொடிய சித்தரவதை என சோகத்தில் ஆழ்ந்தனர். ஆனால் போதகர் இயேசுவோ தனக்காக மாரடித்து அழும் பெண்களிடம், பச்ச மரத்திற்கே இந்த நிலை என்றால், பட்ட மரத்திருக்கு என்ன நிலையோ, எனவே உங்கள் பிள்ளைகளுக்காக அழுங்கள் என்கிறார்.

அன்பான இறைமக்களே! இறைமகன் இயேசுவின் கூற்று முற்றிலும் உண்மை. இன்றைய இளையோர் இறைவனை மறந்து, ஏன் பெற்றோர்கள், குடும்பத்தையும் மறந்து தான் தோன்றி தனமாக வாழ்வதை பார்கின்றோம். உலக இன்பம், நண்பர் கூட்டம், குடி களியாட்டம் போதை பேதை என வாழ்ந்து தங்களுது எதிர் காலத்தை இழப்பதை பார்கின்றோம். அவர்களுக்காக இறைவனிடம் அழுது, அவர்கள் நல்வழியில் புதிய வாழ்வுப்பெற்றிட வேண்டுவோம். ஜெபமே இறைவனின் இதயத்தை திறக்கும் சாவி என்று புனித தந்தை பியோ கூறுகின்றார். ஆம் செபத்தால், தபத்தால், உண்மையான வாழ்வால் இறைவனின் ஆசீரை நமது பிள்ளைகளுக்காக கொணர்வோம். ஆற்றல்மிக்க சமூகத்தை, அன்புள்ள இளையோரை, உண்மையான நாளைய உலகை கட்டி எழுப்ப இன்றே முயன்றிடுவோம்.

**செபம்**

கனிவான இதயம் கொண்ட வல்லமையான இறைவா! எம் இளையோரை ஆசீர்வதியும். அவர்கள் திருமகனாம் இயேசுவின் பாதையை தெரிந்து, இறைவார்த்தைகளை இதயத்தில் தாங்கி, உண்மையிலும், அன்பிலும் நித்தம் வழிநடக்க வரம்தாரும். ஆமென்.

## ஒன்பதாம் நிலை: இறைமகன் இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்...

***அன்பின் பாதையில் மூன்றாம் சறுக்கல்.*** *மீண்டும் ஒருமுறை சிலுவையின் பாரத்தால் இறைமகன் மண்ணில் விழுகிறார், மனிதனின் பாவத்திற்காக புழுதியில் விழுந்து கிடக்கிறார். அவரை வீழித்தியது நாம்தான். நமது பாவம்தான், எனபதை உணர்கிறோமா? பிறரை மன்னிக்காதபோது, நிறை குறையோடு சக மனிதரை ஏற்றுக்கொள்ளாதபோது, பிறருக்கு களங்கம் கற்பித்தபோது, அடுத்திருப்பருக்கு நம்மால் இயன்றும் உதவாதபோது, இறைவனை மறந்து உலக இன்பத்தில் திளைக்கும்போது, நன்றிகெட்ட மனிதராய் வாழும்போது மீண்டும், மீண்டும் மீட்பராம் இயேசுவை மண்ணில் விழ்த்துகின்றோம். நம்மை படைத்து, நமக்கு வாழ்வளித்து, கண்மணியாய் காத்த இறைவனுக்கு நாம் அளிக்கும் நன்றி பரிசு இதுதானா? மிகவும் வேதனையானது. என் வார்த்தைகளை நம்பாவிட்டாலும், என் செயல்கள் பொருட்டாவது நம்புங்கள் என்றார், ஆம் அவரது சொல்லும், செயலும் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்கிறது. அவரது வாழ்வு முழுவதும் உண்மை, நன்மை, அன்பு, மன்னிப்பு இவற்றுக்கு மட்டும்தான் இடம். இவைகளே மனிதருக்கு மகிழ்ச்சிதரும் பாதை என்றார். எத்தனை பேருக்கு அவர் உரைத்து கேட்டது?*

*அன்பான இறைமக்களே! திருமகன் இயேசுவின் வார்த்தையை நம்பாததால் நம் வாழ்வில் விளைந்தது என்ன? துன்பம், வேதனை, பிரிவு, நோய், தனிமை, இழப்பு, கொள்ளைநோய்கள். கொலை, கொள்ளை, காமவேட்கை, பத்து கட்டளைகளுக்கு எதிரான செயல்கள். பணம்,பொருள், வசதி அனைத்தும் இருந்தும் நிம்மதி எங்கே? என்ற குரல் நம் உள்ளத்தில் ஓங்கி ஒலிக்கவில்லையா? ஆம். உலகம் காட்டும் பாதைக்கு மயங்கி, உங்களையும், உங்கள் பிள்ளைகளையும், உங்கள் குடும்பத்தையும் இழக்க வேண்டாம். எனவே இறைமகன் இயேசுவின் உயிருள்ள வார்த்தைக்கு செவிமடுப்போம். பாவத்தை விலக்கி, நன்மையை நாடுவோம். நிம்மதி என்ற வெளிச்சம் நம் உள்ளத்தில் ஒளிரும். விடிவெள்ளி இதயத்தில் விளக்கேற்றும். விழுந்து கிடக்கும் நல்ல ஆயன் இயேசுவை நமது தூய வாழ்வால் தூக்கி நிறுத்துவோம்.*

### செபம்

*அன்பின் இருப்பிடமே இறைவா! பாவத்தை நீக்கி, நன்மையை நாங்கள் என்றும் நாடி,தேடி செல்லவும் உண்மையின் ஒளியில் வாழும் நாளெல்லாம் நடக்கவும், ஆர்வத்தோடு சமுதாய சேவை புரியவும் வரும்தாரும். ஆமென்.*

## பத்தாம் நிலை: இறைமகன் இயேசுவின் ஆடைகள் உரியப்படுகின்றன...

**ஒளிவு மறைவற்ற அன்பு.** *ஆண்டவரின் ஆடைகள் உரியப்படுகின்றன, ஆம் அவற்றோடு சேர்த்து அவரின் தோலும் உரிக்கப்படுவதுதான் கொடுமை. கசையடிக்கும், எண்ணற்ற கொடுமைகளுக்கும் உள்ளான அவரது திருவுடல் இப்போது ஆடைகள் உரியபடுவதன் மூலம், பல காயங்கள் மீண்டும் புதிதாய் திறக்கின்றன. உயிரோடு ஆண்டவரின் தோல் உரிக்கப்படுகிறது, அவரை நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்துகின்றனர். ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்கிறது பழமொழி. இங்கு இந்த கொடிய மனம் படைத்த மனிதர்கள் அவரை ஒரு உயிராக கூட மதிக்கவில்லை என்பதுதான் எதார்த்தம். ஏழைக்கு உடுத்தியவரை, உணவளித்தவரை, உண்மையை மட்டும் வாழ்வால் உரக்க கூவியவரை, பல மனிதர்களுக்கு புது வாழ்வை தந்தவரை, பலரின் கண்ணீர் வாழ்க்கையை களிநடனமாய் மாற்றியவரை அவமானபடுத்தி எள்ளி நகையாடுகின்றனர். ஏளனம் செய்து கைகொட்டி சிரிக்கின்றனர். மனிதமும், புனிதமும் கொண்டவரை ஒரு விலங்கைப்போல நடத்தி காரி உமிழ்கின்றனர். அன்பு புரட்சிக்கு அவமானம் மட்டும்தான் பரிசு.*

*அன்பான இறைமக்களே! இன்று எத்தனை பெண்கள் மானபங்கம் படுத்தப்படுகின்றனர். அவர்கள் இல்லத்தில், வேலை செய்யும் இடத்தில், பொது இடங்களில் நீ இதை உணர்ந்தாயா? உன் தாய், தங்கை, மகளாக, மற்ற பெண்களை ஏற்க மறுப்பதால் விளையும் கொடுமைகள் ஏராளம். மனிதரின் மிருதனத்தை குறித்து ஆண்டவர் இயேசு கலங்குகின்றார். மனிதநேயம் மறையும் நிலைகண்டு வேதனைப்படுகின்றார். இறைவனின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு, அதை மறந்தால், என்ன நடக்கும் என்பதையும் நீ அறிவாய். பிறகு எதற்கு வரம்பு மீறி பாவத்தைக்கட்டி துன்பத்தில் விழுகின்றாய். யாரையும் கேவலப் படுத்தாதே, அசிங்கமாய் பேசாதே. நாம் எல்லாரும் கடவுளின் பிள்ளைகள் என்பதை ஒருபோதும் மறவாதே. ஒருவர் மற்றவரை மதித்து, பிறரின் அந்தரங்க வாழ்வுக்கு மதிப்பளித்து, அவர்களை நல்வழிப்படுத்தும் செயலில்தான் நல் வாழ்வின் புதிய விடியல் உள்ளது என்பதை உணர்ந்து வாழ்வோம்.*

**செபம்**

*உயிரினங்கள் அனைத்தையும் அன்பு செய்யும் விண்ணக தந்தையே, இறைவா! நாங்கள் ஒருவர் மற்றவரை மதித்து, மனிதநேயத்தைப் போற்றி, மனிதத்தின் மாண்பைக் காத்து, வாழ்ந்திட வரம்தரும். ஆமென்.*

## பதினோராம் நிலை: இறைமகன் இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்...

***அன்பினை ஆணிகளால் துளைக்கின்றன.*** *இறைமகன் இயேசுவை சிலுவையின்மீது கிடத்தி மூன்று ஆணிகளால் அறைந்து அவரை அந்த சிலுவையோடு இணைக்கின்றனர். அவரின் நரம்புகள் அறுக்கப்படுகின்றன. எலும்புகள் துளைக்கப்படுகின்றன. இரத்த நாளங்கள் அறுந்து இரத்தம் தெறித்து பீறிட்டு ஓடுகின்றது. சொல்லன்னா துன்பத்தில் ஒரு புழுவைப்போல துடிக்கின்றார். மனித உருவம் முற்றிலும் சிதைந்து காணப்படுகின்றார். மனிதாபமற்ற அந்த உரோமை வீரர்களும், யூத குருக்களும் அவரின் இந்த நிலைகண்டு சிறிதும் பதறாமல் கொண்டாடுகின்றனர். ஆணிகள் கொண்டு அன்பு புரட்சியை முடக்கிவிடலாம் என்று இரத்த வெறிபிடித்த அந்த அதிகாரவர்க்கம் எத்தனிக்கிறது. உதவிகள் செய்தே பழக்கபட்ட ஆண்டவரின் புனித கரங்களை கூர்மையான ஆணிகள் குத்தி கிழிக்க மனுமகனின் குருதி மண்ணில் ஆறாய் ஓடுகிறது. கலிலேயா, யுதேயா, சமாரியா என எருசலேம் வரை நற்செய்தியை ஓய்வின்றி பறைசாற்றிய காலுகளுக்கு ஆணிகள். அந்த ஆணிகள் அவரின் புனித கால்களை கிழித்துக்கொண்டு சிலுவையோடு இணைக்கிறது.*

*அன்பான இறைமக்களே! ஏன் இத்தனை பாடுகள், யாருக்காக இவைகள். கிறிஸ்து இயேசுவின் இரத்தமே இவ்வுலகின் மீட்பு. கிறிஸ்துவின் வழியாய்யின்றி மானிடருக்கு மீட்பில்லை. நம்முடைய பாவங்கள் இறைமகன் இயேசுவின் புனித இரத்தத்தால் கழுவப்படுகின்றன. புதிய வாழ்வை நாம் பெறுகின்றோம். இன்றும் எத்தனயோ மக்கள் கொடிய உடல் வலிக்கும், மன வலிக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். நம்முடைய இரக்கமற்ற சொல், செயல் பலரின் மனதை குத்தி கிழித்தி ஆறா வடுவை ஏற்படுத்துகின்றன. பல குடும்பங்கள் வீதிக்கு வந்துள்ளன. பிறருக்கு மதிபளிப்போம். குறிப்பாக சோதனையான நேரத்தில் தோள் கொடுப்போம். துணை நிற்போம். வன் சொல் அகற்றி இன் சொல்லால் இச்சமூகத்திற்கு ஆறுதல் தருவோம்.*

**செபம்**

*துன்புறும் மனிதரின் துயர்நீக்கி ஆறுதலின் கரங்களால் அரவணைக்கும் இறைவா! பிறருக்கு துன்பம் தரும் சொல், செயல் அகற்றி, என்றும் உம் வார்த்தையின் வழியில் நடந்து ஒளியாக, சாரமுள்ள உப்பாக வாழ வரம் தாரும். ஆமென்.*

## பன்னிரெண்டாம் நிலை: இறைமகன் இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்...

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்.** *ஆண்டவர் இயேசு சிலுவையில் மரிக்கிறார். வாழ்வு தரவந்த வாழ்வின் வேந்தனை இந்த வஞ்சக உலகம் கொன்று, நீதியை வேரோடு சாய்த்து விட்டதாக கொக்கரிக்கிறது. எல்லாம் நிறைவேறிற்று என்ற நிறைவில், முப்பத்தி மூன்று வயதில் இறைமகன் இயேசு தனது ஆவியை தந்தை இறைவனிடம் ஒப்படைக்கிறார். இறையரசை பாலஸ்தீனத்தில் அடித்தளமிட்டு, அதை உலகெங்கும் எடுத்து செல்ல சீடர்களையும் உருவாக்கி, அன்பான, உன்னதமான, அமைதியான, ஒற்றுமையான உலகம் நாம் செய்வோம் என்ற நம்பிக்கையில் சுதனாகிய கிறிஸ்து இயேசு சிலுவையில் உறங்குகிறார். தான் படைத்த உலகத்தை சீரமைக்க அவர் எடுத்துக்கொண்ட பணி, மகத்தானது, பாவம் போக்க, சாபம் நீக்க, சாவையும் சாகடிக்க தன்னையே முழுமையாக நமக்கு தந்து அன்பின் மறுபக்கம் அவரேதான் என்று நிருபித்துள்ளார். தந்தையே என்னை கைவிட்டது ஏனோ என்று கதறினாலும், தான் எடுத்துக்கொண்ட மீட்பு பணியிலிருந்து எள்ளளவும் விலகாமல் அன்புப்பணி புரிந்தார். சோதனைகளை கடந்து சாதனை புரிந்துள்ளார். அநீதியை வென்று நீதியை நிலைநாட்டியுள்ளார். அன்புவழி நடக்கும் யாவருக்கும் விண்ணக வாசலை திறந்துள்ளார். திருமகனின் மரணத்தால் தந்தையாம் இறைவனின் இரக்கம் நம்மை நோக்கி இறங்கியுள்ளது.*

*அன்பான இறைமக்களே! நமக்காக ஆண்டவர் இயேசு சிலுவையில் மரித்துள்ளார். பாவ வாழ்வை அகற்றி தூய்மை வாழ்வை நாம் நாடவும், அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும், ஏழை எளியோரின் காவலராய் நாம் என்றும் இயங்கவும் வல்லவராம் கிறிஸ்து தன்னையே சாவுக்கு உட்படுத்திள்ளார். அவரின் புனிதமான வாழ்வும், தெய்வீக மரணமும் நம் புது வாழ்வுக்கான தொடக்கம். நமது தோல்வி, துன்பம், சோகம், இழப்பு, வேதனை அனைத்தும் இந்த மரணத்தோடு மரணித்து விட்டது . உண்மைக்காக கிறிஸ்து போரடியதுப்போல நாமும் விடியலை நோக்கி போராட முன் வரவேண்டும். நம்பிக்கை இழந்தவரின் வாழ்வில் நம்பிக்கை தீபத்தை ஏற்றுவோம்! உண்மை அன்புக்கு முடிவுமில்லை, மரணமுமில்லை.*

**செபம்**

*எந்நாளும் எங்களை அன்பு செய்யும் அன்பின் இறைவா! எந்த சூழ்நிலையிலும் நாங்கள் நம்பிக்கை இழக்காமல், என்றும் உண்மையின் வழியில் போராடவும், நற்செய்தி பணிக்காய் உயிரையும் கொடுக்கும் மன வலிமையை வரம்தாரும் ஆமென்.*

***பதிமூன்றாம் நிலை: இறைமகன் இயேசுவை, அன்னை மரியாவின் மடியில் கிடத்துகிறார்கள்...***

***தாயின் மடியில் அன்பு.*** *உலக மீட்பராம் இயேசுவின் உயிரற்ற உடல் அவரது அன்பு தாய் அன்னை மரியாவின் மடியில் வளர்த்தப்படுகிறது. உயிரற்ற மகனின் உடல் கண்டு உள்ளம் குமுறுகிறார் மரியன்னை. அன்று கபிரியேல் வானவரின் வார்த்தையினால் புனிதமாக தனது உதரத்தில் உருவான இறைமகன். தன் இரத்தத்தின் இரத்தம். தன் தசையின் தசை, தன் அன்பு மகன் நிலைகண்டு கதறுகிறார். அந்த அன்புதாய்க்கு எவ்வாறு ஆறுதல் தர இயலும். யாரால்தான் இயலும். பித்து பிடித்தவரைபோல் இறந்த தன் மகனை மடியில் போட்டுக்கொண்டு புலம்புகிறார். பாவ மாசற்ற தன் மகனை இந்த உலகம் கொன்றதை குறித்து அவர் கோபம் கொள்ளவில்லை. இவ்வளவு கொடிய மரணத்தின் மூலம்தான் மானிடத்தை மீட்க நீர் திருவுளம் கொண்டீரோ என்று வேதனையில் விம்மி அழுகிறார். அன்னையின் ஒவ்வொரு கண்ணீர் துளிக்கும் நாம்தான் பதில் சொல்ல வேண்டும். அதை நமது நல் வாழ்வால் அவருக்கு ஆறுதல் தரவேண்டும். நம் பாவங்கள்தான் அவரது மகனை கொன்றாலும், நம்மீது சிறிதும் அவருக்கு வருத்தமில்லை. மாறாக தன் மகனின் மரணத்தால் நாம் பெற்றுக்கொண்ட அன்பு வாழ்வை போற்றிக்காத்திட வேண்டும் என்றுதான் அவரது கண்ணீர் நமக்கு அழைப்பு விடுக்கிறது.*

*அன்பான இறைமக்களே! பெற்ற பிள்ளைகளால் கவனிக்கப்படாமல் இன்றும் எத்தனையோ தாய்மார்கள் கண்ணீரோடு வாழ்கின்றனர். இன்றைய இளைய உலகம், குடும்பத்தை மறந்து, குறிப்பாக வயதான பெற்றோரை மறந்து, சுய நன்னை சுகபோக வாழ்வில் மெய்மறந்து உல்லாசமாய் வாழ்கின்றனர். எனவே பல வயதுமுதிந்த பெற்றோர் தனிமையிலும், நோயிலும், உணவின்றியும் வாடுகின்றனர். பல பெற்றோர்களுக்கு பிள்ளைகள் இருந்தும், இல்லாதவர்களாக உள்ளனர். அந்த தாய்மார்களின் கண்ணீருக்காகவும் சேர்த்துதான் அன்னை மரியா வேதனைப்படுகிறார். இருண்ட உலகில் வாழும் மக்களே, உலக இன்பத்தை விட்டு வெளியே வந்து உண்மையான மகிழ்ச்சியை பெற முயலுங்கள். கிறிஸ்துவின் மரணம் நமக்கு புதிய சிந்தனையை தரவேண்டும். அன்பான போலித்தனமில்லாத பெற்றோரின் காயங்களை போக்க ஒவ்வொரு மகனுக்கும், மகளுக்கும் கடமை உண்டு என்பதை உணர்வோம். காலம் தாழ்த்த வேண்டாம் கிறிஸ்து நமக்காக இறந்துள்ளார். அவரது உயிர்ப்பில் புது வாழ்வை பெற்றோரும், பிள்ளைகளும் பெற வேண்டும். பாவமில்லா, காயங்கள் இல்லா உலகை அமைக்க முயற்சி செய்வோம்.*

***செபம்***

*அன்பே அகிலத்தை ஆட்சி செய்யவேண்டும் என்ற அடிப்படையில் உலகை உருவாக்கிய இறைவா! வாழ்வதற்கு தேவையான அடிப்படை ஆதாரமற்ற மனிதர்களுக்கு உதவிடவும், ஒருவர் மற்றவரின் கண்ணீரை துடைத்து, அன்பினால் இணைந்து வாழ்ந்திடவும் எங்களுக்கு வரம்தாரும். ஆமென்.*

**பதினான்காம் நிலை : இறைமகன் இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்...**

***கல்லறையில் உறங்கும் அன்பு.*** *புனிதமிகு திருசுதனின் புனித உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது. அமைதியில் ஆழ்கிறார் இறைவனின் திருமகன். தந்தை கடவுள் தன்னிடம் ஒப்படைத்த உலகத்தின் மீட்பு பணியை செவ்வனே முடித்து ஓய்வு கொள்கிறார். இறைமகன் இயேசு பாடுகளின் மரணத்தை கண்டு அஞ்சவில்லை. துணிந்து சென்று சிலுவை மரணத்தை ஏற்று அனைவருக்கும் நிலைவாழ்வை உறுதிப்படுத்தியுள்ளார். ஆண்டவர் இயேசுவை கொன்று வாழ்வை வீழ்த்திவிட்டோம் என அதிகாரவர்க்கம் கொண்டாட்டத்தில் திளைக்கிறது. உண்மை ஒருபோதும் வீழ்வதில்லை. பகலவனை யாரும் கையால் மறைக்க இயலாது. கிறிஸ்து வெற்றி வீராக சாவை வென்று புதிய வாழ்வுதர உயிர்த்தெழப் போகிறார். இங்கு உறங்குவது அதிவீரியமுள்ள விண்ணக விதை. அது மண்ணோடு மடிந்துள்ளது. தன்னலத்தை இழந்துள்ளது. மீண்டும் விண்ணை காண விருச்சமாய் வீறுகொண்டு எழும். பாவ இருளகற்றி, அகத்தில் ஒளி ஏற்றும். துன்பத்தை நீக்கி இணையற்ற மகிழ்ச்சியை அருளும். அடிமை விலங்கொடித்து சுதந்திர தென்ற காற்று அவனியெங்கும் பவனி வரும்.*

*அன்பான இறைமக்களே! இறைமகன் இயேசுவில் பாவம், சாபம், துன்பம், சாவு, அழுகை, தோல்வி என்பதில்லை. மாறாக புண்ணியம், புதுமை, வாழ்வு, வெற்றி என்பது மட்டும்தான் உண்டு. எத்தனை துன்பங்கள் நம்மை சூழ்ந்தாலும், கிறிஸ்துவுக்குள் வாழ்வோர் எதிர்கொண்டு வெற்றிபெறுவார். இனி நம் வாழ்வில் இருளில்லை, ஒளி மட்டுமே. ஒளியாம் கிறிஸ்து நம்மை அருள் வாழ்வுக்கு அழைத்து செல்வார். கிறிஸ்துவை இறுக்கமாய் பற்றிக்கொண்டு, மனித வாழ்வின் இறுதிமட்டும் பயணம் செய்வோம். விண்ணுலகில் நிலையான வாழ்வை உரிமையாக்கிக்கொள்வோம்.*

**செபம்**

*அன்பினால் எம்மை அரவணைத்துக் காக்கும் இறைவா! நாங்கள் ஒருபோதும் உம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து விடாமல் இருக்கவும், அன்பான மனிதர்களாய் அகிலத்தில் வாழவும் அருள் தாரும். ஆமென்.*

**முடிவுரை**

என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வர் என்று கூறுகிறது மறைநூல். கிறிஸ்துவில் என்றும் மரணமில்லை. வாழ்வே நிரம்பியிருக்கிறது. என்னில் வாழ்பவர் கிறிஸ்து இயேசுவே என்ற புனித பவுலடியாரின் வார்த்தையை இதயத்தில் ஊன்றுவோம். சிலுவை பயணத்தோடு நமது தியானத்தை முடித்துவிடாமல் நம் அனுதின வாழ்வுக்கு எடுத்து சென்று கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு உயிர்கொடுப்போம். வார்த்தையாம் கிறிஸ்து நம்மில் வெளிப்பட வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும் அமைதி என்றும் நம்மில் நிலைக்கொள்ளும். அதற்கான ஆற்றலை இறைவன் நமக்கு அருள, நாமும் பிறருக்கு துணை நிற்க ஆண்டவனின் ஆசிவேண்டி நிற்போம். இறைமகன் இயேசுவின் அன்பில் நம் வாழ்க்கை பயணத்தை இடர்வரினும் தொடர்வோம். ஆமென்.